# எட்டுவது எளிது !

[ மெல்லக் கற்போருக்கான ஒருமதிப்பெண் மற்றும் இரண்டாம் தாள் கற்றல் கட்டகம் ]

ஆக்கம்.
சி.குருநாதசுந்தரம்,
பட்டதாரி ஆசிரியர் [ தமிழ் ]
ஏ. மாத்தூர்,
அரசு மேனிலைப்பள்ளி.
புதுக்கோட்டை மாவட்டம்.

முடியாது என்பது மூடத்தனம்;
முடியும் என்பதே மூலதனம்.

## ஒரு மதிப்பெண் வினாக்கள்
## செய்யுள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் __________
2. மாணிக்கவாசகர் பாடல்கள் __________ திருமுறை என வழங்கப்படுகின்றன.
3. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் __________ உள்ளது.
4. மாணிக்கவாசகர் தலைமை அமைச்சராக __________ மன்னரிடம் பணியாற்றினார்.
5. ஜி.யு. போப் திருவாசகத்தை __________ மொழியில் மொழி பெயர்த்தார்.
6. திருவாசகத்திற்கு உருகார் __________ உருகார்.

**உரிய சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

7. மெய்தான் __________ (அறும்பி / அரும்பி) விதிர் விதிர்த்து உன் __________ (விரையார் / விறையார்) கழற்கென்.
8. கைத்தான் நெகிழ விடேன்; இதில் நெகிழ என்பது __________ (தலர / தளர) என்னும் பொருளில் வந்துள்ளது.

**பொருத்துக :**

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| 9. | விரை | - | உடல் |
| 10. | சுழல் | - | பெருகி |
| 11. | ததும்பி | - | மணம் |
| 12. | மெய் | - | அணிகலன் |

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

13. திருக்குறளில் __________ அதிகாரங்களும் __________ குறட்பாக்களும் உள்ளன.
14. திருக்குறள் __________ முதலான உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
15. ஒழுக்கத்தின் எய்துவர் __________ இழுக்கத்தின் எய்துவர் __________ பழி.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

16. திருக்குறளைப் போற்றிப்பாடும் நூல் __________
    1. நால்வர் நான்மணி மாலை 2. திருவள்ளுவமாலை 3. இரட்டை மணி மாலை
17. திருக்குறள் __________ வெண்பாக்களால் ஆன நூலாகும்.
    1. சிந்தியல் 2. குறள் 3. நேரிசை
18. இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே எனப் பாடியவர் __________
    1. பாரதியார் 2. சுரதா 3. பாரதிதாசன்

**உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக :**

19. இறுவரை காணின் __________ (கிழக்காம் / கிளக்காம்) தலை.
20. ஒழுக்கமுடையவர் என்னும் பொருள்தரும் சொல் __________ (உரவோர் / உறவோர்)

**அடி எதுகையை எடுத்தெழுதுக :**

21. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்.

**சீர்மோனையை எடுத்தெழுதுக :**

22. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.

**விடுபட்ட சீர்களை எழுதுக :**

23. பரிந்தோம்பில் __________ ஒழுக்கம் தெரிந்தோம்பித் தேரினும் __________ துணை.
24. ஊக்கம் உடையான் __________ பொருதகர் தாக்கற்குப் __________ தகைத்து.

**உவமையைப் பொருளோடு பொருத்தி எழுதுக :**

25. "அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று"

**சீர் பிரித்து எழுதுக :**

26. ஒழுக்கமுடைமைகுடிமைஇழுக்கம்இழிந்தபிறப்பாய்விடும்.
27. காலங்கருதியிருப்பர்கலங்காதுஞாலங்கருதுபவர்.

**பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 28. அறத்துப்பால் | - | 25 அதிகாரங்கள் |
| 29. பொருட்பால் | - | 38 அதிகாரங்கள் |
| 30. இன்பத்துப்பால் | - | 70 அதிகாரங்கள் |
| | - | 50 அதிகாரங்கள் |

**உரிய விடையைத் தேர்வு செய்க :**

31. ஏலாதி _________ நூல்களுள் ஒன்று.
    1. மேற்கணக்கு 2. கீழ்க்கணக்கு 3. காப்பிய
32. கணிமேதாவியாரின் காலம்
    1. சங்க காலம் 2. சங்கம் மருவிய காலம் 3. இடைக்காலம்
33. மருந்துப் பொருள்களைால் அமையப் பெற்ற இருநூல்களின் பெயர்களை எழுதுக.
    1. திருக்குறள், நன்னூல் 2. திரிகடுகம், ஏலாதி 3. நற்றிணை, அகநானூறு

**உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக :**

34. நூ.....(ல்/ள்) நோக்கி வா......(ழ்/ல்)வான் நு.....த்து (னி/ணி)

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

35. இரட்டைக் காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரமும் _________ ஆகும்.
36. சிலப்பதிகாரம், மணிமேகலை _________ வளையாபதி _________ என்பன ஐம்பெருங் காப்பியங்கள் ஆகும்.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

37. இளங்கோவடிகள் _________ நாட்டைச் சேர்ந்தவர்.
    1. சோழநாடு 2. சேரநாடு 3. பாண்டிய நாடு
38. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர் _________
    1. கவிமணி 2. பாரதிதாசன் 3. பாரதியார்

**உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக :**

39. வா.....தல் (ல்/ழ்) வே....டி (ண்/ன்) ஊழ்வினை து.....ப்ப (ற/ர)
40. தா.....ந்த (ள்/ழ்) குடையன் தளர்.....த (ன்/ந்) செங்கோ.....ன் (ள/ல)

**சீர் எதுகைகளைச் சுட்டுக :**

41. வருக மற்றிவன் தருக ஈங்கென
42. நற்றிறம் படராக் கொற்கை வேந்தே

**சீர் மோனைகளைச் சுட்டுக :**

43. கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று.
44. யானோ அரசன் யானே கள்வன்.

**பொருத்துக :**

| **காண்டம்** | | **காதைகள்** |
|---|---|---|
| 45. புகார் காண்டம் | - | 13 காதைகள் |
| 46. மதுரைக் காண்டம் | - | 7 காதைகள் |
| 47. வஞ்சிக் காண்டம் | - | 10 காதைகள் |
| | - | 15 காதைகள் |

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

48. குடும்ப விளக்கு _________ படைத்த குறுங்காவியங்களில் ஒன்று.
    1. பாரதியார் 2. பாரதிதாசன் 3. சுரதா
49. பாரதிதாசனார் _________ என அழைக்கப்படுகிறார்.

1. புரட்சிக் கவிஞர் 2. தேசியக் கவிஞர் 3. உவமைக் கவிஞர்

**உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக :**

50. இரு.....த (ன்/ந்) வ.......ளலைக் (ல்/ள்) கா.....வந் (ன/ண) தெ.....தினான் (ய்/ளு)
51. இடரு..... (ர/ற) ம.....யோரும் (றை/ரை) எ.....யுறு (ரி/றி) மெ.....கானார் (ழு/ளு)

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

52. ஆறு காண்டங்களைக் கொண்ட நூல் _________
    1. சிலப்பதிகாரம் 2. கம்பராமாயணம் 3. சீறாப் புராணம்
53. சரசுவதி அந்தாதி _________ இயற்றிய நூல்களுள் ஒன்று.
    1. கம்பர் 2. ஒட்டக்கூத்தர் 3. புகழேந்தி
54. கம்பரைப் புரந்தவர் _________
    1. ஔவையார் 2. புகழேந்தி 3. சடையப்ப வள்ளல்

**உவமையை விளக்கிப் பொருளோடு பொருத்தி எழுதுக :**

55. "மட அன்னக் கதியது செல"

**சீர்மோனையை எடுத்து எழுதுக :**

56. "இந்துவின் நுதலாளோடு இளவலொ டினிதேறா"

**அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக :**

57. இறை
58. நாவாய்

**பொருத்துக :**

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| 59. | இடர் | - | நிலவு |
| 60. | நாவாய் | - | துன்பம் |
| 61. | இறை | - | படகு |
| 62. | இந்து | - | தலைவன் |

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

63. நற்றிணை ஒன்பது அடி சிற்றெல்லையும் _________ப் பேரெல்லையும் உடையது.
64. அரி என்னும் சொல்லின் பொருள் _________

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

65. "நல்" என்னும் அடைமொழி பெற்ற நூல் _________
    1. அகநானூறு 2. கலித்தொகை 3. நற்றிணை
66. நற்றிணையைத் தொகுப்பித்தவர் _________
    1. பன்னாடு தந்த மாறன் வழுதி 2. இளம்பெருவழுதி 3. உக்கிரப் பெருவழுதி
67. நற்றிணை _________ நூல்களைச் சார்ந்தது.
    1. பத்துப்பாட்டு 2. எட்டுத் தொகை 3. பதினெண் கீழ்க்கணக்கு

**பொருத்துக :**

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| 68. | செறு | - | பனையோலைப் பெட்டி |
| 69. | வித்து | - | புதுவருவாய் |
| 70. | யாணர் | - | விதை |
| 71. | வட்டி | - | வயல் |

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

72. சேக்கிழார் பெருமாள் அருளியது _________
    1. சிவபுராணம் 2. பெரியபுராணம் 3. தலபுராணம்
73. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் "திருநாவுக்கரகர்" எனப் பெயர் வைத்தவர்
    1. அப்பூதியடிகளார் 2. மாறநாயனார் 3. திருநீலகண்டர்
74. பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய "கவி வலவ" எனப் பாடியவர்

www.kalvisolai.com
Gurunathans.blogspot.in

1. பெ.சுந்தரனார் 2. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்
3. கவிஞர் வெ.இராமலிங்கனார்

**கோடிட்ட எழுத்துக்கள் குறிக்கும் தொடையை எழுதுக :**

75. அளவில்சனம், உளமனைய, குளம்நிறைந்த, வளமருதம்
76. கடிதணிந்த, அடியணியா, முடிவில்தவம், வடிவுடையீர்

**உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக :**

77. வ.....ம் மருவும் (ல/ள) நி.....ல் தரும் (ள,ழ) தண்.....ர் (நீ/ணீ) பந்தர் வந்த.....ந்தார் (ணை/னை)
78. சந்தமு....(ர/ற) வ.....ந்ததனை (றை/ரை) எம்ம.....ங்கும் (ரு/று) தாம் க.....டார் (ன்/ண்)

**பொருத்துக :**

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| 79. | மேதி | - | சிவன் |
| 80. | சந்தம் | - | எருமை |
| 81. | கோதில் | - | அழகு |
| 82. | அங்கணர் | - | குற்றமில்லாத |
| | | - | பசு |

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

83. போலிப்புலவர்களைத் தலையில் குட்டுபவர் _________
84. போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் _________

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

85. இல்லாரை _________ எள்ளுவர்.
86. அறனீனும் இன்பமும் ஈனும் _________ தீதின்றி வந்த பொருள்.

**உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக :**

87. அரு.....டும் (ளொ/லொ) அ.....பொடும் (ண்/ன்) வா.....ப் (ரா/றா) பொரு.....க்கம் (லா/ளா)
88. உ.....பொருளும் (று/ரு) உ.....கு(ள்/ல்) பொருளும் தன் ஒ.....னார்(ண்/ன்)

**விடுப்பட்ட சீர்களை நிரப்பி எழுதுக :**

89. அறனறிந்து _________ அறிவுடையார் _________
திறனறிந்து _________ கொளல்.
90. பொருளென்னும் _________ _________இருளறுக்கும்
எண்ணிய _________ சென்று.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

91. திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் _________
1. அன்புள்ள பெற்றோர் 2. ஆர்வமுள்ள நண்பர் 3. அறிவுடையார் கேண்மை
92. அரியவற்றுள் எல்லாம் அரிது _________ பேணித் தமராக் கொளல்
1. சிறியவர் 2. பெரியார் 3. உறவினர்
93. முதலிலார்க்கு _________ இல்லை.
1. ஊதியம் 2. நட்பு 3. பகை

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

94. திருநாவுக்கரசர் தமக்கையார் _________ ஆவார்.
95. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் _________ என அழைக்கப்படும்.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

96. திருநாவுக்கரசரின் காலம் _________
1. கி.பி. 12ஆம் நூற்றாண்டு 2. கி.பி. 7ஆம் நூற்றாண்டு 3. கி.பி. 9ஆம் நூற்றாண்டு
97. "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் இப்பாடல்தான் _________ "அச்சமில்லை அச்சமில்லை" எனப் பாடத்தூண்டியது.
1. பாரதிதாசனை 2. சுரதாவை 3. பாரதியாரை

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

98. சீறாப்புராணம் இயற்றியவர் _________
99. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் _________

**உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக :**

100. சீறாப்புராணம் _________ காண்டங்களையுடையது.
 1. மூன்று 2. ஐந்து 3. ஏழு
101. கேழல் என்பதன் பொருள் _________
 1. எருமை 2. புலி 3. பன்றி
102. "கண்டனன் களித்தன்" _________ ஆகும்.
 1. பெயரெச்சம் 2. வினையெச்சம் 3. முற்றெச்சம்

**யார் யாரிடம் கூறிய தொடர் இது?**

103. "வென்றி வாளரசே"
104. "வேறொரு காட்டினிற் புகுக"

**உவமையைப் பொருளுடன் பொருத்துக :**

105. "எழிலிரு புயமும் குன்று போலுற"

**கீழ்க்காணும் அடியிலுள்ள சீர்மோனையைச் சுட்டுக :**

106. மன்ற லுன்றிய முகம்மதின் மலரடி வணங்கி

**கீழ்க்காணும் அடிகளிலுள்ள அடி எதுகையைச் சுட்டுக :**

107. "நீண்ட வானிலம் புடைத்திடக் கிடந்துட னிமிர்ந்து கூண்ட கான்மடித் திருவிழி கனல்கள் கொப்பளிப்பு"

**பொருத்துக :**

| | **சொல்** | | **பொருள்** |
|---|---|---|---|
| 108. | கான் | - | கரடி |
| 109. | உழுவை | - | சிங்கம் |
| 110. | மடங்கல் | - | புலி |
| 111. | எண்கு | - | காடு |

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

112. கலித்தொகை என்பது _________ நூல்களில் ஒன்று.
 1. பத்துப்பாட்டு 2. எட்டுத்தொகை 3. பதினெண் கீழ்க்கணக்கு
113. நெய்தல் கலியைப் பாடியவர் _________
 1. ஓரம்போகியார் 2. கபிலர் 3. நல்லந்துவனார்
114. போற்றாரைப் பொறுத்தல் என்பது _________ எனப்படும்.
 1. பொறை 2. முறை 3. நிறை

**பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| 115. | பண்பு | - | கூறியது மறாஅமை |
| 116. | அன்பு | - | பேதையார் சொல் நோன்றல் |
| 117. | அறிவு | - | தன்கிளை செறாஅமை |
| 118. | செறிவு | - | பாடறிந்து ஒழுகல் |

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

119. நந்திக் கலம்பகம் _________ வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
 1. 96 2. 18 3. 10
120. பணை என்னும் சொல்லின் பொருள் _________
 1. அரசு 2. ஆல் 3. மூங்கில்
121. தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் _________ போன்றிருந்தேனே.
122. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் _________ குலசேகரர் பாடியதாகும்.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

123. பெருமான் திருமொழியில் _________ பாசுரங்கள் உள்ளன.
1. 205  2. 105  3. 100

124. குலசேகராழ்வார் பாடல் _________ தொகுப்பில் உள்ளது.
1. திருவியற்பா  2. முதலாயிரம்  3. பெரியதிருமொழி

## உரைநடை

**கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுதுக :**

1. தமிழர், மனித வாழ்வை _________, _________ எனப் பிரித்தனர்.
2. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி _________
3. 2004-ஆம் ஆண்டு _________ திங்களில் தமிழ் மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.
4. தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியில் அறிஞர் _________ ஆவார்.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

5. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர் _________
1. திரு.வி.க.  2. உ.வே.சா  3. பாவாணர்

6. இன்றைய மதுரையில் _________ தமிழ்ச்சங்கம் இருந்தது.
1. மூன்றாம்  2. இரண்டாம்  3. முதலாம்

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

7. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள _________ ஒன்று உண்டு.
8. பெரியார் சமூக _________ எதிர்த்தவர்; மூடக் கருத்துக்களை _________

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

9. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றுப்போது நம் சமூகத்தில் தலைகீழ் புரட்சி ஏற்படும் என்றவர்.
1. திரு.வி.க  2. பெரியார்  3. பாரதிதாசன்

10. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று _________ இல்லாமை.
1. வாக்குரிமை  2. பேச்சுரிமை  3. சொத்துரிமை

**விடைகளுக்கு ஏற்ற வினா எழுதுக :**

11. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
12. பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.

**சந்திப்பிழை நீக்கி எழுதுக :**

13. ஆண்களை போலவே பெண்களுக்கும் அரசு பணி அனைத்து துறைகளிலும் கொடுக்க வேண்டும்.
14. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை பயணமாம்.

**ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக :**

15. கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவருக்கு மன்னரும் பணிந்தாள்.
16. பெண்கள் பெற வேண்டியது பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

17. 1918இல் மும்பையில் சிறிது காலம் _________ பேராசிரியராகப் பணியாற்றினார்.
1. வணிகவியல்  2. அறிவியல்  3. பொருளியல்

18. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது _________
1. பத்மஸ்ரீ  2. பாரத ரத்னா  3. பத்ம விபூஷன்

**கீழ்க்காணும் தொடர்களில் காணப்படும் ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக :**

19. இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது.
20. வயது வந்தோர்க்கு வாக்குரிமை, பெண்களுக்க வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தது.

**சந்திப் பிழை நீக்கி எழுதுக :**

21. ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்.
22. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

23. வெறும் பேச்சுக்கும் _________ பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.
24. பேச்சு முடிவில் _________ கூறிக் கருத்தை நிலை நாட்டி முடிக்க வேண்டும்.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

25. நுண்ணிய நூல்பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை _________
    1. ஓவியக் கலை 2. இசைக்கலை 3. பேச்சுக்கலை
26. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் _________
    1. பேரறிஞர் அண்ணா 2. மு.வரதராசனார் 3. கா.அப்பாதுரையார்

**ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக :**

27. புலவர்கள் பொங்கற்புதுநாளின் மாண்பினை உணர்ந்து கொண்டாடினார்.
28. மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயர்நாடி போன்றது.

**சந்திப்பிழை நீக்கி எழுதுக :**

29. மேடை பேச்சு மிகுந்த பயனை தரவல்லது.
30. மக்களை இலட்சிய பார்வையிலே அழைத்து செல்லும் வன்மையுடையதே மேடை பேச்சு.

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

31. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் _________ என அழைப்பர்.
32. படப்பிடிப்புக் கருவியை _________ பொருத்துவதும் உண்டு.
33. இயங்குரு படங்கள் பார்ப்பதற்கு _________ இருக்கும்.

**கீழ்க்காணும் பகுதியில் சந்திப்பிழை நீக்கி எழுதுக :**

34. திரைப்படம் எடுக்க பயன்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
35. திரைப்படம் மக்களை தன்பால் ஈர்த்து கட்டிபோட வல்லது.

**ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக :**

36. ஈஸ்ட்மன் என்பார் சுருள் சுருளாகப் பிலிம் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தனர்.
37. இயங்குரு படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.

**கீழ்க்காணும் விடைகள் வருமாறு ஏற்ற வினாத் தொடர்கள் அமைத்து எழுதுக :**

38. செய்திப் படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்.
39. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப் படக்கருவி பயன்படுகிறது.

**தேவையான இடங்களில் நிறுத்தற் குறியிடுக :**

40. கதைப் படங்கள் மட்டுமின்றிக் கருத்தப் படங்கள் செய்திப் படங்கள் விளக்கப் படங்கள் கல்விப் படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.

**பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 41. ஈஸ்ட்மன் | - | ஒருவர் மட்டும் பார்க்கும் கருவி |
| 42. எடிசன் | - | படச்சுருள் |
| 43. எட்வர்டு மைபிரிட்சு | - | கருத்துப்படம் |
| 44. வால்ட் டிஸ்னி | - | இயக்கப்படம் |

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

45. இலெமூரியாவை _________ எனக் குறிப்பிடுவர்.
46. தனக்குவமையில்லா ஒரு _________ தமிழினம்.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

47. "பண்ணொடு தமிழொப்பாய்" எனத் தொடங்கும் பாடல் இடம் பெறும் நூல் _________
    1. திருவாசகம் 2. திருக்குறள் 3. தேவாரம்

**சந்திப்பிழை நீக்கி எழுதுக :**

48. மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ் மொழி விளங்குகிறது.

**ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக :**

49. காவிரிபூம்பட்டினத்தில் பொருள்கள் மண்டிக் கிடந்தது.
50. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.

**கீழ்க்காணும் தொடருக்கேற்ப வினாத் தொடர் அமைக்க :**

51. தமிழர்கள் அரபு நாட்டுடனும் யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

**உரிய விடையைத் தேர்வு செய்து எழுதுக :**

52. உலகம் என்ற தமிழ்ச் சொல் _________ என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது.
    1. உலகு 2. உலவு 3. உளது
53. தமிழர்கள் நிலத்தை _________ வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
    1. மூன்று 2. ஆறு 3. ஐந்து

**சந்திப்பிழை நீக்கி எழுதுக :**

54. தமிழில் வரலாற்று கருத்துகளையும், பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்.

**தொடர்களில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள வினைப்பகுதியை எச்சமாக்கி எழுதுக :**

55. நன்றாகப் _________ (பசி) பின்னர் அளவுடன் உண்ண வேண்டும்.
56. தமிழர் நிலத்தினை ஐவகையாகப் _________ (பிரி) வாழ்ந்திருந்தார்கள்.

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

57. "அனைத்தையும் இழப்பினும் உண்மையை இழக்கிலேன்" எனக் கூறியவர் _________
58. திருக்குறளை மொழி பெயர்த்துக் காந்தியடிகளுக்கு அனுப்பிய உருசிய அறிஞர் _________

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

59. காந்தியடிகள் _________ பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி கொண்டார்.
    1. சிரவண பிதுர்பத்தி நாடகம் 2. அரிச்சந்திரன் நாடகம் 3. பக்த பிரகலாத நாடகம்
60. "பகைவனிடமும் அன்பு காட்டு" எனக் கூறியநூல் _________
    1. பகவத் கீதை 2. நன்னூல் 3. பைபிள்
61. அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை _________, _________
    1. ஆடம்பரம், வீண் செலவு 2. எளிமை, சிக்கனம் 3. அன்பு, அருள்

**கீழ்க்காணும் விடைகள் வருமாறு தொடர்கள் அமைக்க :**

62. காந்தியடிகள், "பலகோடி மக்களின் பட்டினி போக்கும் வாழ்வாதாரம் கதர்" என்று கருதினார்.
63. இளைஞர்களின் உள்ளங்களில் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் தெய்வப் பற்றும் வளரும் வகையில் கல்வி அமைய வேண்டும்.

**கீழ்க்காணும் தொடர்கள் எவ்வகைத் தொடர்கள்?**

64. காந்தியடிகள் அரிச்சந்திர நாடகத்தை ஒரு முறை பார்த்தார்.
65. இப்படிச் செய்வது ஏய்த்துப் பிழைக்கும் செயலல்லவா?

**ஒருமை பன்மைப் பிழைகளை நீக்குக :**

66. ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.
67. மனிதனின் நோக்கம் உயர்வானதாகவும் தூய்மை யானதாகவும் இருந்தால் மட்டும் போதா.

**பொருத்துக :**

68. சத்திய சோதனை - திருவள்ளுவர்
69. பகவத் கீதை - கிறித்துவச் சமய நூல்
70. திருக்குறள் - காந்தியடிகள்
71. பைபிள் - இந்து சமய நூல்

www.kalvisolai.com
Gurunathans.blogspot.in

**கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக :**

72. இராமலிங்கர் சத்திய தரும சாலையை நிறுவிய இடம் _________
73. இராமலிங்கர் தமிழ் மொழியே _________ தரும் என்று கருதினார்.

**உரிய விடையைத் தேர்ந்து எழுதுக :**

74. "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் _________
    1. கந்த புராணம் 2. சீறாப்புராணம் 3. பெரிய புராணம்
75. வள்ளலாரின் இயற்பெயர் _________
    1. சம்பந்தர் 2. இராமலிங்கர் 3. தாயுமானவர்

**சந்திப்பிழை நீக்கி எழுதுக :**

76. வள்ளலார் அருளிய வழிகளை கடை பிடித்து ஒழுகினால் மனித நேயம் மலரும்.
77. அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசன புதுமையை புகுத்தினார்.

**கோடிட்ட இடங்களை நிறைவு செய்க :**

78. சங்க காலத்தில் _________ கடந்து செல்லக்கூடாது.
79. நாள்தோறும் கல்வியில் _________ உண்டாகிக் கொண்டிருக்கின்றன.
80. காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும் _________ தேர்வும் உண்டு.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

81. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி _________
    1. பத்தாம் வகுப்பு 2. பன்னிரண்டாம் வகுப்பு 3. எட்டாம் வகுப்பு
82. விரல்கள் பத்தும் மூலதனம் எனக் கூறியவர் _________
    1. பாரதியார் 2. பாரதிதாசன் 3. தாராபாரதி

**ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக :**

83. பெண்கள் கடல் கடந்து செல்லக்கூடாதெனக் கூறி வந்தார்கள்.
84. தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் உள்ளது.

**தேவையான இடங்களில் நிறுத்தற்குறியிடுக :**

85. தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி கைப்பேசி கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.

**சந்திப்பிழை நீக்கி எழுதுக :**

86. கைதொழில் ஒன்றை கற்று கொள்
87. பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும் கடல் கடந்து செல்ல கூடாதெனவும் கூறி வந்தனர்.

**கீழ்க்காணும் விடைகளுக்கேற்ற வினாத் தொடர் அமைத்து எழுதுக :**

88. இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.
89. தொழில்நுட்பப் பயிலகத்தில் பயில்வோருக்கு நிறைய வேலை வாய்ப்புகள் உண்டு.

**பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| 90. | வினையே ஆடவர்க்குயிர் | - | கவிமணி |
| 91. | முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை | - | குறுந்தொகை |
| 92. | உடம்பை வளர்த்தேன், உயிரை வளர்த்தேன் | - | தொல்காப்பியர் |
| 93. | கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் | - | திருமூலர் |

www.kalvisolai.com

Gurunathans.blogspot.in

## இலக்கணம்

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. வளையல் - இச்சொல்லில் ஐகாரம் _________ குறைந்து ஒலிக்கிறது.
2. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் _________ ஆகும்.
3. பல் + தீது என்பது _________ எனப் புணரும்.
4. குறுக்கங்கள் ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், _________ ஆய்தக் குறுக்கம் என நால் வகைப்படும்.

**பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 5. ஐகாரக் குறுக்கம் | - | மு ஃடீது |
| 6. ஔகாரக் குறுக்கம் | - | தலைவன் |
| 7. ஆய்தக் குறுக்கம் | - | போன்ம் |
| 8. மகரக் குறுக்கம் | - | வௌவால் |

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

9. பூங்குழலி பொம்மையைச் செய்தான். இத்தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது, பொம்மை _________ செய்யப் _________ எனவரும்.
10. அழகன் பாடம் எழுதுகிறான். இத்தொடரில் ஓர் எழுவாய் _________ கொண்டு முடிந்ததால் _________ தொடர் ஆகும்.
11. அன்பரசன் திருக்குறளைக் கற்றான். இத்தொடர் பிறவினையாக மாறும்போது அன்பரசன் திருக்குறளைக் _________ என வரும்.

**தொடரை மாற்றி அமைக்க :**

12. திருக்குறளை அனைவரும் அறிவர். இச்செய்தியை வினாத் தொடராக அமைக்க.
13. இமயமலை மிக உயரமானது. இதனை உணர்ச்சித் தொடராக மாற்றுக.
14. கிளி கல்லால் அடிபட்டது என்னும் தனி நிலைத் தொடர், _________ எனவரின் உணர்ச்சித் தொடராகும்.
15. வாரியார், "குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்க வேண்டும்" என்றார் - அயற்கூற்றாக.
16. நேற்று மாலை புயல் வீசியது. மரங்கள் சாய்ந்தன. இதனைக் கலவைச் சொற்றொடராக மாற்றி எழுதுக.

**17. சந்திப்பிழையற்ற தொடர் எது?**

1. கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
2. கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
3. கயிற்று கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.

**18. ஒருமை பன்மைப் பிழையற்ற தொடர் எது?**

1. அவன் கவிஞன் அல்ல.
2. அவன் கவிஞன் அன்று.
3. அவன் கவிஞன் அல்லன்.

**19. பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?**

1. அவர்களிருவர்க்கும் இடையே விவாதம் நடந்தது.
2. அவர்களிருவர்க்கும் இடையே உரையாடல் நடந்தது.
3. அவர்களிருவர்க்கும் இடையே கான்வர்சேசன் நடந்தது.

**20. கீழ்க்காணும் தொடரில் வழூஉச் சொல்லற்ற தொடர் எது?**

1. வலதுபக்கச் சுவரில் எழுதாதே.
2. வலப்பக்கச் சுவரில் எழுதாதே.
3. வலப்பக்கச் சுவற்றில் எழுதாதே.

**21. கீழ்க்காணும் தொடர்கள் எவ்வகையானவை?**

21. எங்கிருந்தாலும் வாழ்க. (செய்தி, வினா, கட்டளை)
22. பிசிராந்தையார் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்கிறார். (உணர்ச்சி, வினா, செய்தி)
23. குழந்தையை அடித்தது யார்? (உணர்ச்சி, வினா, கட்டளை)
24. தேசியக் கொடி தலைமையாசிரியரால் ஏற்றப்பட்டது. (தன்வினை, செய்வினை, செயப்பாட்டுவினை)

25. வயலில் ஆடுகள் மேய்ந்தில் (உடன்பாடு, எதிர்மறை, கட்டளை)
26. காந்தியடிகள் உண்மை பேசாமல் இரார். (எதிர்மறை, பொருள்மாறா எதிர்மறை)

**கீழ்க்காணும் தொகைச் சொற்களை விரித்தெழுதுக :**

27. இருவினை -
28. இருதிணை -
29. முத்தமிழ் -
30. முக்கனி -
31. மூவேந்தர் -
32. நானிலம் -

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

33. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது _________
34. தொழிலைக் குறிக்கும் சொல் _________
35. வினைமுற்ற _________, _________ என இருவகைப்படும்.
36. ஓர் எ்சசவினை _________ கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம் எனப்படும்.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

37. இளவழகன் வந்தான். இது _________ தொடர்.
    1. குறிப்பு 2. வெளிப்படை 3. எதுவுமில்லை
38. "மாடு" என்னும் சொல் _________ ஆகும்.
    1. உயர்திணைப் பொது 2. அஃறிணைப் பொது 3. விரவுப் பெயர்
39. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது _________ குறிக்கும்.
    1. பசுவை 2. காளையை 3. கன்றை

**பொருத்துக :**

40. வெளிப்படைச் சொற்கள் - சோறு உண்டான்
41. குறிப்புச் சொல் - கல், மண்
42. இனங்குறித்தல் - இருவர் குழந்தை பெற்றனர்

**உவமை உருவக மாற்றம் :**

| உவமை | | உருவகம் |
|---|---|---|
| 43. அமுதமொழி | - | |
| 44. கயற்கண் | - | |
| 45. தேன் தமிழ் | - | |
| 46. பூவிரல் | - | |
| 47. மதிமுகம் | - | |
| 48. மலரடி | - | |
| 49. மலர்க்கை | - | |
| 50. முத்துப்பல் | - | |
| 51. விற்புருவம் | - | |
| 52. மலர்ப்பாதம் | - | |

**கீழுள்ள தொடர்களில் உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக :**

53. அண்ணன், தம்பி வீடு சென்றார்.
54. மாணாக்கர்கள் வட்டமாக உட்காரச் செய்.
55. நான் திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
56. வேல்விழி திருக்குறள் படித்தாள்.

**கீழுள்ள விலங்குகளை அவற்றின் இளமைப் பெயர்களோடு பொருத்துக :**

57. ஆடு - கன்று
58. மான் - பிள்ளை
59. கீரி - குட்டி
60. சிங்கம் - குஞ்சு
61. கோழி - குருளை

**கீழுள்ள உரைப்பகுதிக்கு ஏற்ற நிறுத்தற்குறியீடு தருக :**

62. சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும்.

**பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக :**

63. சேஷத்திரங்கள் தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.
64. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
65. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
66. நாளை நடக்க இருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.
67. நான் இந்தக் காலேஜின் ஓல்டு ஸ்டூடண்ட்.

**கீழுள்ள தொடர்களை அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக :**

68. மலர்ப்பாதம் (உருவகமாக)
69. விழிகயல் (உவமையாக)
70. ஆனந்தக்கடல் (உவமையாக)
71. கனிவாய் (உருவகமாக)
72. தேன்மொழி (உவமையாக)

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

73. ஒரு பொருள் குறித்து வரும் தொடர்ச் சொற்களையே _________ என்பர்.
74. ஒரு பொருட் பன்மொழி எடுத்துக் காட்டுத் தருக _________
75. இது செய்வாயா என்னும் வினாவிற்கு "வயிறு வலிக்கும்" எனக் கூறுவது _________
76. ஆடத் தெரியுமா? என்னும் வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது _________ விடை ஆகும்.
77. நன்னூல் கிடைக்குமா? எனக் கடைக்காரரிடம் கேட்பது _________ வினா ஆகும்.

**பொருத்துக :**

78. அறிவினா - வருவாயா? எனில் வாரேன் என்பது
79. ஏவல் வினா - உண்டாயா? எனில் வயிறு வலிக்கும் என்பது
80. மறைவிடை - இதனைச் செய்வாயா? எனில் நீயே செய் என்பது
81. உறுவது கூறல் - இதன் பொருள் யாது? ஆசிரியர் மாணவரிடம் கேட்பது

**பின்வரும் உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக :**

82. அடியற்ற மரம் போல
83. மடை திறந்த வெள்ளம் போல
84. அத்தி பூத்தாற் போல
85. மழை காணாப் பயிர் போல
86. வேலியே பயிரை மேய்ந்தது போல

**புறவய வினாக்கள் :**

87. மான் _________ மருளும் பார்வை. உரிய உவமை உருபை இணைத்து எழுதுக.
88. கீழ்க்காணும் தொகை உவமைகளை விரியுவமையாக மாற்றுக.
    அ. மதிமுகம் ஆ. பவளவாய்
89. கீழ்க்காணும் விரியுவமைச் சொற்களைத் தொகை யுவமையாக மாற்றுக.
    அ. கயல் போன்ற விழி ஆ. கிளி போன்ற மொழி

**அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக :**

90. மலர்ப்பாதம் (உருவகமாக)
91. விழிக்கயல் (உவமையாக)
92. கனிவாய் (உருவகமாக)
93. பல்முத்து (உவமையாக)

**உவம உருபுகள் இரண்டு தந்து தொடரில் அமைக்க :**

94. போல
95. அன்ன

**கீழுள்ள மரபுத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைக்க :**

96. ஆயிரங்காலத்துப் பயிர்
97. எடுப்பார் கைப்பிள்ளை
98. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது

www.kalvisolai.com



99. அவலை நினைத்து உரலை இடித்தல்
100. முதலைக் கண்ணீர்

**கீழுவள்ள தொடரில் அமைந்துள்ள ஒருமை, பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக :**

101. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப் படக் கருவி என்ற கருவி பயன்படுகின்றன.
102. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல இருக்கின்றது.
103. இன்று பேருந்துகள் ஓடாது.
104. ஒரு அணில் மரத்தில் ஏறின.
105. நான் வாங்கியது இது அல்ல.

**கீழுள்ள தொடருக்கு ஏற்று வினா அமைக்க :**

106. திரைப்படம் எடுப்பதைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.
107. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இரு கண்களாக எம்.ஜி. இராமச்சந்திரன் கருதினார்.

**கீழுள்ள மரபுத் தொடருக்கேற்ற பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

108. கதிர்வேலுவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்.
    அ. வாழை பயிரிடுதல் ஆ. பரம்பரை பரம்பரையாக இ. பயிர்த் தொழில்
109. எம்.ஜி. இராமச்சந்திரன் திரைவானில் கொடி கட்டிப் பறந்தார்.
    அ. தனிப்புகழோடு விளங்குதல் ஆ. கொடி கட்டுதல் இ. கனவு காணுதல்

**கீழுள்ள மரபுத் தொடர்களைத் தொடர்களில் அமைத்து எழுதுக :**

110. சீட்டுக் கிழிந்து விட்டது
111. முதலைக் கண்ணீர்
112. கயிறு திரித்தல்

**கீழுள்ள சொற்களுக்கு இரு பொருள் தருக :**

113. ஆறு -
114. திங்கள் -
115. மாலை -
116. நகை -
117. மெய் -

**தமிழெண்களை அறிவோம்**

**பொருத்துக :**

| | அரபு எண்கள் | | தமிழெண்கள் |
|---|---|---|---|
| 118. | 100 | - | உரு0 |
| 119. | 120 | - | களO |
| 120. | 250 | - | க00 |
| 121. | 170 | - | உ00 |
| 122. | 200 | - | கஉ0 |

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

123. வடக்கு என்னும் திசைப் பெயரோடு பிற திசைகள் வந்து சேரும்போது ________
    அ. நிலைமொழி ஈறு நீங்கும் ஆ. நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்
    இ. வருமொழி முதல் கெடும்.
124. மேற்கு + நாடு என்பது ________ எனச் சேரும்.
    அ. மேற்கு நாடு ஆ. மேநாடு இ. மேனாடு
125. கருமை + குழி என்பது ________ எனும் விதிகளின்படி புணர்ந்தது.
    அ. ஆதிநீடல், இனமிகல் ஆ. தன்னொற்று இரட்டல், இடை உகரம் "இ" ஆதல்
    இ. ஈறுபோதல், இனமிகல்

**பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| 126. | ஈறுபோதல் | - | வெற்றிலை |
| 127. | ஆதிநீடல் | - | செந்தமிழ் |
| 128. | முன்னின்ற மெய் திரிதல் | - | செம்மொழி |
| 129. | தன்னொற்றிரட்டல் | - | மூதூர் |

**கீழுள்ள தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக :**

130. அவள் விலா நோகச் சிறித்தாள்
131. அச்சம், நானம், மடம், பயிர்ப்பு இவை பெண்கலின் அணிகளன்கள்.
132. ஒருக்கால் இன்று மளை பெய்யளாம்.
133. இன்று வீட்டிர்க்கு வந்தால் அருசுவை உனவு உன்டு.
134. சுவற்றில் விளம்பறம் செய்யாதே.

**கீழ்க்காணும் தமிழெண்களைக் கூட்டி எழுதுக :**

135. உரு + உரு =
136. கள0 + க0 =
137. க0க + அ0 =
138. க00 + க00 =
139. கஉ0 + உ00 =

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

140. அகம், புறம் ஆகிய இரண்டும் _________ இலக்கணம் ஆகும்.
141. குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும் _________ எனப்படும்.
142. நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி _________ எனப்படும்.
143. யாமம் என்பது இரவு 10 மணி முதல் _________ வரை ஆகும்.
144. மருதம், நெய்தல் இரண்டிற்கும் _________ பெரும் பொழுதுகளும் வரும்.
145. திருமால் _________ நிலத்திற்குரிய தெய்வம்.
146. மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும் _________ திணைக்குரிய பறைகள்.
147. நெய்தல் திணைக்குரிய தொழில்கள் _________ ஆகும்.

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

148. பொருளிலக்கணம் _________ வகைப்படும்.
அ. இரண்டு ஆ. மூன்று இ. ஐந்து
149. அகத்திணைகள் _________ வகைப்படும்.
அ. மூன்று ஆ. ஐந்து இ. ஏழு
150. மார்கழி, தை ஆகிய இரண்டும் _________ காலத்திற்குரியன.
அ. முன்பனி ஆ. பின்பனி இ. இளவேனில்
151. மருத நிலத்திற்குரிய தெய்வம் _________
அ. முருகன் ஆ. திருமால் இ. இந்திரன்
152. பாலை நிலத்திற்குரிய பறவைகள் _________
அ. கிளி, மயில் ஆ. நாரை, அன்னம் இ. புறா, பருந்து

**பொருத்துக :**

| | **நிலம்** | | **விலங்கு** |
|---|---|---|---|
| 153. | குறிஞ்சி | - | முயல், மான் |
| 154. | முல்லை | - | புலி, கரடி |
| 155. | மருதம் | - | முதலை, சுறா |
| 156 | நெய்தல் | - | எருமை, நீர் நாய் |

**கீழ்க்காணும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக :**

157. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
158. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
159. விளையும் பயிர் முளையிலே தெரியும்
160. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
161. சிறு துரும்பும் பல் குத்த உதவும்

**உரிய விடையைத் தேர்த்தெழுதுக :**

162. புறத்திணைகள் _________ வகைப்படும்.
அ. ஐந்து ஆ. ஏழு இ. பன்னிரண்டு

163. நிரைகவர்தல் என்பது _________
அ. கரந்தை ஆ. வெட்சி இ. உழிஞை

164. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது _________
அ. வஞ்சித்திணை ஆ. காஞ்சித்திணை இ. வாகைத்திணை

165. பாடாண் திணை என்பது _________ கூறுவது.
அ. ஆண்மகனின் ஒழுகலாறுகள் ஆ. பெண்மகளின் ஒழுகலாறுகள்
இ. போரின் தன்மைகள்

166. ஒருதலைக் காயம் என்பது _________
அ. அன்பின் ஐந்திணை ஆ. கைக்கிளை இ. பெருந்திணை

167. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது _________ ஆகும்
அ. நொச்சி ஆ. தும்பை இ. காஞ்சி

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :**

168. "உலகு" என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு _________ஆகும்.
அ. நாள் ஆ. காசு இ. பிறப்பு

169. "நல்லவை" இச்சொல் _________ எனப் பிரியும்.
அ. நேர்நேர் ஆ. நிரைநேர் இ. நேர்நிரை

170. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி _________ வரும்.
அ. நாற்சீராய் ஆ. முச்சீராய் இ. ஐஞ்சீராய்

171. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் _________ முடிவது சிறப்பு.
அ. ஆகாரத்தில் ஆ. ஏகாரத்தில் இ. ஓகாரத்தில்

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

172. நேரிசை வெண்பா இரண்டாம் அடியில் தனிச் சொல் பெற்று _________ விகற்பத்தானும _________ விகற்பத் தானும் வரும்.

173. இரண்டாம் அடியில் தனிச் சொல் பெற்று பல விகற்பத்தான் வருவது _________ ஆகும்.

174. வெண்பாவின் ஓசை _________ ஆகும்.

175. ஆசிரியப்பாவின் வேறு பெயர் _________ ஆகும்.

176. ஆசிரியப்பாவின் ஓசை _________ ஆகும்.

**177. விடுப்பட்ட இடங்களை நிரப்புக :**

| வ. எண். | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | கட/னென்/ப | | புளிமாங்காய் |
| 2. | நல்/லவை | நேர் நிரை | |
| 3. | எல்/லாம் | நேர் நேர் | |
| 4. | கட/னறிந்/து | | கருவிளங்காய் |
| 5. | சான்/றாண்/மை | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6. | மேற்/கொள் | | தேமா |
| 7. | பவர்க்கு | நிரைபு | |

**பொருத்துக :**
**ஒலிமரவு**

178. மயில் - கரையும்
179. கூகை - கத்தும்
180. யானை - அலறும்
181. காகம் - அகவும்
182. ஆடு - பிளிறும்

**உரிய விளைமரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

183. எங்கள் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் _________ (கட்டப்பட்டது / எழுப்பப்பட்டது)

184. பாரதியார் செய்யுளை _________ (பாடினார் / இயற்றினார்)

185. வேடன் _________ அம்பு யானையை வீழ்த்தியது. (எய்த / செலுத்திய)
186. மாறன் ஓவியத்தை _________ (வரைந்தான் / புனைந்தான்)
187. அந்தச் சிற்பம் ஒரே கல்லில் _________ (வடிக்கப்பட்டது / செதுக்கப்பட்டது)

**கீழுள்ள தொடரில் காணப்படும் பிறமொழிச் சொற்களை நீக்கி உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக :**

188. வேலன் சுயதொழிலில் அதிக இலாபம் ஈட்டினான்.
189. அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.
190. அனைவரையும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.
191. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச் சிறந்த நிபுணர்.
192. அலங்கரித்துக் கொள்வதில் பெருவிருப்பு கொண்டிருந்தாள் எழிலி

**கீழுள்ள வினாகளுக்கு உரிய தமிழெண்களால் நிரப்புக :**

193. உன் வகுப்பில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை
194. உன் இல்லத்தின் எண்
195. ஒட்டுரிமைக்காக வரையறுக்கப்பட்டுள்ளது - வயது
196. பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் நீ எடுக்க விரும்பும் மதிப்பெண்

## செய்யுள்

**விடைகள் :**

1. திருவாதவூர்
2. எட்டாம்
3. திருப்பெருந்துறையில்
4. அரிமர்த்தன பாண்டிய(ன்)
5. ஆங்கில
6. ஒரு வாசகத்திற்கும்
7. அரும்பி; விரையார்
8. தளர
9. விரை - மணம்
10. சுழல் - அணிகலன்
11. ததும்பி - பெருகி
12. மெய் - உடல்
13. 133; 1330
14. ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன்
15. மேன்மை; எய்தாப்
16. திருவள்ளுவ மாலை
17. குறள்
18. பாரதிதாசன்
19. கிழக்காம்
20. உரவோர்
21. நன்றி / என்றும் } "ன்" என்பது அடி எதுகை
22. ஒழுக்கம்........ஒழுக்கம் - 1,4 சீர்களில் "ஒ" என்னும் சீர்மோனை ஒன்றி வந்துள்ளது.
23. காக்க; அஃதே
24. ஒடுக்கம்; பேரும்
25. அழுக்காறு (பொறாமை) உடையவனிடம் செல்வம் சேராது என்பது உவமை. ஒழுக்க மில்லாதவரிடம் உயர்வு சேராது என்பது பொருள். சேராமை - பொதுப்பண்பு; போன்று - உவமஉருபு.
26. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்<br>இழிந்த பிறப்பாய் விடும்.
27. காலங் கருதி யிருப்பர் கலங்காது<br>ஞாலங் கருது பவர்.
28. அறத்துப்பால் - 38 அதிகாரங்கள்
29. பொருட்பால் - 70 அதிகாரங்கள்
30. இன்பத்துப்பால் - 25 அதிகாரங்கள்
31. 2. கீழ்க்கணக்கு
32. 2. சங்கம் மருவிய காலம்
33. 2. திரிகடுகம், ஏலாதி
34. நூல் நோக்கி வாழ்வான் நுனித்து
35. மணிமேகலையும்
36. சீவக சிந்தாமணி, குண்டலகேசி
37. சேர (நாடு)
38. பாரதியார்
39. வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்ப
40. தாழ்ந்த குடையன் தளர்ந்த செய்கோலன்
41. வருக...தருக - 1,3 சீர்களில் "ரு" என்பது சீர் எதுகை
42. நற்றிறம்...கொற்கை - 1,3 சீர்களில் "ற்" என்பது சீர் எதுகை
43. கள்வனை...கடுங்கோல் - 1,3 சீர்களில் "க" என்பது சீர் மோனை
44. யானோ...யானே - இதில் "யா" என்பது (1,3 சீர்களில் வந்துள்ள) சீர் மோனை
45. புகார் காண்டம் - 10 காதைகள்
46. மதுரைக் காண்டம் - 13 காதைகள்
47. வஞ்சிக் காண்டம் - 7 காதைகள்
48. 2. பாரதிதாசன்
49. 1. புரட்சிக் கவிஞர்

50. இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான்
51. இடருற மறையோரும் எரியுறு மெழுகானார்
52. 2. கம்பராமாயணம்
53. 1. கம்பர்
54. 3. சடையப்ப வள்ளல்
55. அலைகள் நிறைந்த கங்கையாற்றில் இளமையான அன்னப் பறவை நீந்துவது போல, இராமன், இலக்குவன், சீதை ஆகியோரை உடைய படகு மெதுவாகச் சென்றது என்கிறார் கம்பர்.

    இதில் அன்னம் - உவமை; படகு - உவமேயம் (பொருள்) ___ மெதுவாகச் செல்லுதல் - பொதுப்பண்பு.
56. இந்துவின்.....இளவலொடு - என 1,3 ஆம் சீர்களில் “இ” என்ற எழுத்து சீர்மோனையாக வந்துள்ளது.
57. இறை - அரசன்
58. நாவாய் - படகு
59. இடர் - துன்பம்
60. நாவாய் - படகு
61. இறை - தலைவன்
62. இந்து - நிலவு
63. பன்னிரண்டு அடி
64. நெற்கதிர்
65. 3. நற்றிணை
66. 1. பன்னாடு தந்த மாறன் வழுதி
67. 2. எட்டுத் தொகை
68. செறு - வயல்
69. வித்து - விதை
70. யாணர் - புது வருவாய்
71. வட்டி - பனை யோலைப்பெட்டி
72. 2. பெரியபுராணம்
73. 1. அப்பூதியடிகளார்
74. 2. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்
75. இரண்டாம் எழுத்து “ள” என்பது ஒன்றி வந்துள்ளது. இது எதுகைத் தொடையாகும்.
76. இரண்டாம் எழுத்து “டி” ஒன்றிவந்துள்ளது. இது எதுகைத் தொடையாகும்.
77. வளம் மருவம் நிழல் தரும் தண்ணீர்ப் பந்தர் வந்தணைந்தார்.
78. சந்தமுற வரைந்ததனை எம்மருங்கும் தாம் கண்டார்.
79. மேதி - எருமை
80. சந்தம் - அழகு
81. கோதில் - குற்றமில்லாத
82. அங்கணர் - சிவன்
83. அதிவீரராம பாண்டியன்
84. ஒட்டக்கூத்தர்
85. எல்லாரும்
86. திறனறிந்து
87. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்.
88. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்.
89. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
    திறனறிந்து தேர்ந்து கொளல்.
90. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
    எண்ணிய தேயத்துச் சென்று
91. 3. அறிவுடையார் கேண்மை
92. 2. பெரியார்
93. ஊதியம்
94. திலகவதியார்
95. திருத்தாண்டகம்
96. 2. கி.பி. 7ஆம் நூற்றாண்டு
97. 3. பாரதியாரை
98. உமறுப்புலவர்
99. அபுல் காசிம்
100. 1. மூன்று
101. 3. பன்றி
102. 3. முற்றெச்சம்

103. முகமது நபியிடம், காட்டு வழியே சென்ற மனிதன் காட்டிலுள்ள புலியைப் பற்றிக் கூறும்போது, "வெற்றி பொருந்திய வாளினையுடைய அரசனே" என்று பொருள்தரும் இத்தொடரைக் கூறினான்.
104. முகமது நபி, காட்டு வழியில் எதிர்ப்பட்ட புலியிடம், "நீ மக்கள் நடமாடும் இக்காட்டை விட்டு நீங்கிப் பிறிதொரு காட்டிற்குச் செல்க" என்று உரைத்தார்.

105. நபிகள் நாயகத்தின் இரண்டு தோள்களும் மலை போல் இருந்தன என்பது இத்தொடரின் பொருள்.
மலை - உவமை; நபியின் தோள்கள் - உவமேயம்; திரட்சியும் வலிமையும் - பொதுப் பண்பு; போல் - உவமையுருபு.
106. மன்.....மலரடி - "ம" என்பது சீர் மோனை
107. நீண்ட ; கூண்ட - "ம" என்பது சீர் மோனை
108. கான் - காடு
109. உழுவை - புலி
110. மடங்கல் - சிங்கம்
111. எண்கு - கரடி
112. 2. எட்டுத்தொகை
113. 3. நல்லந்துவனார்
114. 1. பொறை
115. பண்பு - பாடறிந்து ஒழுகல்
116. அன்பு - தன்கிளை செறாஅமை
117. அறிவு - பேதையார் சொல் நோன்றல்
118. செறிவு - கூறியது மறாஅமை
119. 1. 96
120. 3. மூங்கில்
121. குடி
122. திருவாய்மொழி
123. 2. 105
124. 2. முதலாயிரம்

## உரைநடை

**விடைகள் :**

1. அகம், புறம்
2. தமிழ்
3. அக்டோபர்
4. மாக்ஸ்" முல்லர்
5. 3. பாவாணர்
6. 1. மூன்றாம்
7. பெருநோய்
8. முரண்களை; முட்டறுத்தவர்
9. 2. பெரியார்
10. 3. சொத்துரிமை
11. பெண்கள் எதனைப் பெற்று எதைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்?
12. எவற்றை (பெரியார்) ஏற்க மறுத்தார்.
13. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அரசுப் பணி அனைத்துக் துறைகளிலும் கொடுக்க வேண்டும்.
14. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமாம்.
15. கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவருக்கு மன்னரும் பணிந்தார்.
16. பெண்கள் பெற வேண்டியவை பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை
17. 3. பொருளியல்
18. 2. பாரத ரத்னா
19. இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தன.
20. வயது வந்தோர்க்கு வாக்குரிமை, பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தன.
21. ஆசிரியர் பெயரைத் தம் பெயருடன் சேர்த்துப் பீமாராவ் அம்பேத்கராக மாறினார்.
22. ஏழைகளுக்குப் பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்றுத் தந்தார்.
23. மேடைப்
24. கருக்கத்தைக்
25. 3. பேச்சுக்கலை
26. 1. பேறறிஞர் அண்ணா
27. புலவர்கள் பொங்கற்புதுநாளின் மாண்பினை உணர்ந்து கொண்டாடினார்கள்.
28. மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றவை.
29. மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது.
30. மக்களை இலட்சியப் பார்வையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையதே மேடைப் பேச்சு.
31. இயக்குநர்
32. பீடத்தில்
33. வேடிக்கையாக
34. திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
35. திரைப்படம் மக்களைத் தன்பால் ஈர்த்துத் கட்டிப்போட வல்லது.
36. ஈஸ்ட்மன் என்பார் சுருள் சுருளாகப் பிலிம் தயாரிக்கம் முறையைக் கண்டுபிடித்தார்.
37. இயங்குரு படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றன.
38. எவற்றின் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்?
39. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எது பயன்படுகிறது.
40. கதைப் படங்கள் மட்டுமின்றிக் கருத்துப் படங்கள், செய்திப் படங்கள், விளக்கப் படங்கள், கல்விப் படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.
41. ஈஸ்ட்மன் - படச்சுருள்
42. எடிசன் - ஒருவர் மட்டும் பார்க்கும் கருவி
43. எட்வர்டு மைபிரிட்சு - இயக்கப்படம்
44. வால்ட் டிஸ்னி - கருத்துப்படம்
45. மனித நாகரிகம் வளர்ந்த தொட்டில்
46. தனியினம்
47. இ. தேவாரம்
48. மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ்மொழி விளங்குகிறது.
49. காவிரிபூம்பட்டினத்தில் பொருள்கள் மண்டிக் கிடந்தன.
50. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது.
51. தமிழர்கள் எவ்வெவ் நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்?
52. 2. உலவு

53. 3. ஐந்து
54. தமிழில் வரலாற்றுக் கருத்துகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் காண முடியும்.
55. பசித்த
56. பிரித்து
57. அரிச்சந்திரன்
58. தால்ஸ்தாய்
59. 2. அரிச்சந்திர நாடகம்
60. 3. பைபிள்
61. 2. எளிமை, சிக்கனம்
62. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினி போக்க வாழ்வாதாரம் எது என்று கருதினார்?
63. இளைஞர்களின் உள்ளங்களில் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் தெய்வப் பற்றும் வளரும் வகையில் எது அமைய வேண்டும்.
64. செய்தி வாக்கியம்
65. வினா வாக்கியம்
66. ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தாள்.
67. மனிதனின் நோக்கம் உயர்வானதாகவும் தூய்மை யானதாகவும் இருந்தால் மட்டும் போதாது.
68. சத்திய சோதனை - காந்தியடிகள்
69. பகவத் கீதை - இந்து சமய நூல்
70. திருக்குறள் - திருவள்ளுவர்
71. பைபிள் - கிறித்துவச் சமய நூல்
72. வடலூர்
73. இறவாத நிலை
74. 3. பெரிய புராணம்
75. 2. இராமலிங்கர்
76. வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனித நேயம் மலரும்.
77. அறிவு ஒளிபெற அங்கே சோதித் தரிசனப் புதுமையைப் புகுத்தினார்.
78. பெண்கள் கடல்
79. புதுப்புதுத் துறைகள்
80. எழுத்துத்
81. 2. பன்னிரண்டாம் வகுப்பு
82. 3. தாராபாரதி
83. பெண்கள் கடல் கடந்து செல்லக்கூடாதெனக் கூறி வந்தனர்.
84. தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்ப பயிலகங்கள் உள்ளன.
85. தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, கைப்பேசி, கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.
86. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்.
87. பெண்கள் குடும்பத்தைப் பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும் கடல் கடந்து செல்லக் கூடாதெனவும் கூறி வந்தனர்.
88. இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் எந்தப் பணியில் சேரலாம்?
89. எங்குப் பயில்வோருக்கு நிறைய வேலை வாய்ப்புகள் உண்டு?
90. வினையே ஆடவர்க்குயிர் - குறுந்தொகை
91. முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை - தொல்காப்பியர்
92. உடம்பை வளர்த்தேன், உயிரை வளர்த்தேன் - திருமூலர்
93. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் - கவிமணி

## இலக்கணம்

**விடைகள் :**

1. ஒரு மாத்திரையாக
2. திண்ணை
3. பஃறீது
4. மகரக் குறுக்கம்
5. ஐகாரக் குறுக்கம் - தலைவன்
6. ஔகாரக் குறுக்கம் - வௌவால்
7. ஆய்தக் குறுக்கம் - முஃடீது
8. மகரக் குறுக்கம் - போன்ம்
9. பூங்குழலியால்; பெற்றது
10. ஒரு பயனிலை; தனிநிலைத்
11. கற்பித்தான்
12. திருக்குறளை அனைவரும் அறிவரோ?
13. என்னே, இமயமலையின் உயரம்!
14. அந்தோ! கிளி கல்லால் அடிபட்டதே!
15. வாரியார் குழந்தையிடம் ஒவ்வொரு நாளும் திருவாசகம் படிக்குமாறு கூறினார்.
16. நேற்று மாலை புயல் வீசியதால் மரங்கள் சாய்ந்தன.
17. கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
18. அவன் கவிஞன் அல்லன்.
19. அவர்களிருவர்க்கும் இடையே உரையாடல் நடந்தது.
20. வலப்பக்கச் சுவரில் எழுதாதே.
21. கட்டளை
22. செய்தி
23. வினா
24. செயப்பாட்டு வினை
25. எதிர்மறை
26. பொருள்மாறா எதிர்மறை
27. நல்வினை, தீவினை
28. உயர்திணை, அஃறிணை
29. இயல், இசை, நாடகம்
30. மா, பலா, வாழை
31. சேர, சோழ, பாண்டியர்
32. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
33. தனிமொழி
34. வினைச் சொல்
35. தெரிநிலை; குறிப்பு
36. பெயரைக்
37. வெளிப்படை
38. அஃறிணைப் பொது
39. பசுவை
40. வெளிப்படைச் சொற்கள் - கல், மண்
41. குறிப்புச் சொல் - இருவர் குழந்தை பெற்றனர்
42. இனங்குறித்தல் - சோறு உண்டான்
43. அமுதமொழி - மொழியமுதம்
44. கயற்கண் - கண் கயல்
45. தேன் தமிழ் - தமிழ்த்தேன்
46. பூவிரல் - விரல்பூ
47. மதிமுகம் - முகமதி
48. மலரடி - அடிமலர்
49. மலர்க்கை - கைம்மலர்
50. முத்துப்பல் - பல்முத்து
51. விற்புருவம் - புருவ வில்
52. மலர்ப்பாதம் - பாத மலர்
53. அண்ணன், தம்பி வீட்டுக்குச் சென்றார்.
54. மாணாக்கர்களை வட்டமாக உட்காரச் செய்.

55. எனக்குத் திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
56. வேல்விழி திருகுறளைப் படித்தாள்.
57. ஆடு - ஆட்டுக்குட்டி
58. மான் - மான் கன்று
59. கீரி - கீரிப்பிள்ளை
60. சிங்கம் - சிங்கக் குருளை
61. கோழி - கோழிக் குஞ்சு
62. சட்டத்தை மதிப்போம்; குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம்; சட்டம் நம்மைக் காக்கும்.
63. தலங்கள் தோறும் சென்று தெய்வ உருவங்களை வழிபடுக.
64. இவ்வழியில் பயணம் செல்லுங்கள்.
65. இந்தச் சட்டை மிகவும் விலை மிகுதியானது.
66. நாளை நடக்க இருக்கும் போட்டியில் இந்தியா கண்டிப்பாக வெற்றி பெறும்.
67. நான் இந்தக் கல்லூரியின் பழைய மாணவன்.
68. பாதமலர்
69. கயல்விழி
70. கடல் ஆனந்தம்
71. வாய்க்கனி
72. மொழித்தேன்
73. ஒரு பொருட் பன்மொழி
74. மீமிசை ஞாயிறு
75. உறுவது கூறல்
76. இனமொழி கூறல்
77. கொளல் வினா
78. அறிவினா - இதன் பொருள் யாது? ஆசிரியர் மாணவரிடம் கேட்பது
79. ஏவல் வினா - இதனைச் செய்வாயா? எனில் நீயே செய் என்பது
80. மறைவிடை - வருவாயா? எனில் வாரேன் என்பது
81. உறுவது கூறல் - உண்டாயா? எனில் வயிறு வலிக்கும் என்பது
82. கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டதும், கண்ணகி அடியற்ற மரம் போலத் தரையில் விழுந்தாள்.
83. அண்ணாவின் பேச்சு மடை திறந்த வெள்ளம் போலத் தங்கு தடையின்றி அமைந்திருக்கும்.
84. வெளிநாட்டில் குடியேறி விட்டவர்கள் அத்திபூத்தாற்போல எப்பொழுதாவது இந்தியாவுக்கு வருவார்கள்.
85. வேலைக்குச் சென்ற தாய் நீண்ட நேரமாக வீட்டிற்கு வாராமையால் குழந்தை, மழை காணாப் பயிர் போல முகம் வாடியது.
86. காவல் துறையில் ஒரு சிலர் குற்றவாளிகளுக்குத் துணை புரிகின்றனர். இது வேலியே பயிரை மேய்ந்தது போல அல்லவா இருக்கிறது?
87. போல
88. அ. மதி போன்ற முகம் ஆ. பவளம் போன்ற வாய்
89. அ. கயல்விழி ஆ. கிளிமொழி
90. பாத மலர்
91. கயல்விழி
92. வாய்க்கனி
93. முத்துப்பல்
94. வானம் போல விரிந்த புகழ்.
95. தாமரை அன்ன திருவடி.
96. திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர் என்பதனை உணர்ந்து வாழ வேண்டும்.
97. யார் எது சொன்னாலும் நம்பும் எடுப்பார் கைப்பிள்ளையாகத் துரியோதனன் இருந்தான்.
98. நிறுவனங்களைத் திறம்பட நடத்தக் கல்லூரிப் பட்டம் மட்டும் போதாது. அனுபவமும் வேண்டும். ஏனெனில் ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது.
99. அவலை நினைத்து உரலை இடிப்பது போலச் சிலர் நினைப்பது ஒன்று; செய்வது ஒன்று.
100. சுயநலவாதிகள் சிலர் தாம் ஏழைகளின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம் என்பது வெறும் முதலைக் கண்ணீரே.
101. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப் படக் கருவி என்ற கருவி பயன்படுகிறது.
102. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல இருக்கின்றன.
103. இன்று பேருந்துகள் ஓடா.
104. ஒரு அணில் மரத்தில் ஏறியது.
105. நான் வாங்கியது இது அன்று.
106. திரைப்படம் எடுப்பதைவிடக் கடினமான பணி எது?
107. எவற்றைக் தம் இரு கண்களாக எம்.ஜி. இராமச்சந்திரன் கருதினார்?

108. ஆ. பரம்பரை பரம்பரையாக
109. அ. தனிப்புகழோடு விளங்குதல்
110. தமிழரசன் தான் வேலை பார்த்த நிறுவனத்தில் கையாடல் செய்தமையால் அவனுக்குச் சீட்டுக் கிழிந்துவிட்டது.
111. சுயநலவாதிகள் பிறருக்காகப் பேசுவது முதலைக் கண்ணீர்.
112. தேர்தல் நேரத்தில் நமது வாக்குகளைப் பெற வேட்பாளர்கள் நன்றாகவே கயிறு திரிப்பார்கள்.
113. ஆறு - எண் ; நதி
114. திங்கள் - மாதம் ; சந்திரன்
115. மாலை - மாலை நேரம் ; பூமாலை
116. நகை - சிரிப்பு ; அணிகலன்
117. மெய் - உடம்பு ; உண்மை
118. 100 - க00
119. 120 - கஉ0
120. 250 - உரு0
121. 170 - கஎ0
122. 200 - உ00
123. ஆ. நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்
124. இ. மேனாடு
125. இ. ஈறுபோதல், இனமிகல்
126. ஈறுபோதல் - செம்மொழி
127. ஆதிநீடல் - மூதூர்
128. முன்னின்ற மெய் திரிதல் - செந்தமிழ்
129. தன்னொற்றிரட்டல் - வெற்றிலை
130. அவள் விலா நோகச் சிரித்தாள்.
131. அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இவை பெண்களின் அணிகலன்கள்.
132. ஒருகால் இன்று மழை பெய்யலாம்.
133. இன்று வீட்டிற்கு வந்தால் அறுசுவை உணவு உண்டு.
134. சுவரில் விளம்பரம் செய்யாதே.
135. உரு + உரு = ரு0
136. கஎ0 + க0 = கஅ0
137. க0க + அ0 = கஅக
138. க00 + க00 = உ00
139. கஉ0 + உ00 = ஙஉ0
140. பொருள்
141. அன்பின் ஐந்திணைகள், முதற்பொருள்
142. கடலும் கடல்சார்ந்த இடமும்
143. காலை 2 மணி வரை
144. ஆறு
145. முல்லை
146. மருதத்
147. மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல்
148. இரண்டு
149. இ. ஏழு
150. அ. முன்பனி
151. இ. இந்திரன்
152. இ. புறா, பருந்து
153. குறிஞ்சி - புலி, கரடி
154. முல்லை - முயல், மான்
155. மருதம் - எருமை, நீர் நாய்
156. நெய்தல் - முதலை, சுறா
157. கவலையுற்ற மனிதனை அவன் முகமே காட்டிக் கொடுத்து விடும்.அகத்தின் அழகு முகத்தில் தெரியுமன்றோ ?
158. அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதை உணர்ந்து அளவுக்கதிகமான ஆசை வாழ்வை அழித்துவிடும்.
159. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கேற்ப இராமலிங்கவள்ளலார் இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார்.

160. நோயின்றி வாழ்வதே மேன்மையான வாழ்வு.நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமன்றோ?
161. சிறுதுரும்பும் பல்குத்த உதவும் என்பதற்கிணங்க யாரையும் இகழ்தல் நன்றன்று.
162. இ. பன்னிரண்டு
163 ஆ. வெட்சி
164. அ. வஞ்சித்திணை
165. அ. ஆண்மகனின் ஒழுகலாறுகள்
166. ஆ, கைக்கிளை
167. இ. காஞ்சி
168. இ. பிறப்பு
169. இ. நேர்நிரை
170. ஆ. முச்சீராய்
171. ஆ. ஏகாரத்தில்
172. ஒரு ; இரு
173. இன்னிசை வெண்பா
174. செப்பல்
175. அகவற்பா
176. அகவல்
177.

| வ. எண். | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | கட/னென்/ப | **நிரை நேர் நேர்** | புளிமாங்காய் |
| 2. | நல்/லவை | நேர் நிரை | **கூவிளம்** |
| 3. | எல்/லாம் | நேர் நேர் | **தேமா** |
| 4. | கட/னறிந்/து | **நிரை நிரை நேர்** | கருவிளங்காய் |
| 5. | சான்/றாண்/மை | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6. | மேற்/கொள் | **நேர் நேர்** | தேமா |
| 7. | பவர்க்கு | நிரைபு | **பிறப்பு** |

178. மயில் - அகவும்
179. கூகை - அலறும்
180. யானை - பிளிறும்
181. காகம் - கரையும்
182. ஆடு - கத்தும்
183. எழுப்பப்பட்டது
184. இயற்றினார்
185. எய்த
186. புனைந்தான்
187. வடிக்கப்பட்டது
188. வேலன் சுயதொழிலில் அதிக **ஊதியம்** ஈட்டினான்.
189. அந்த **அறிவியல் மேதையின்** கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.
190. அனைவரையும் **உண்ணா நோன்பு** போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.
191. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச் சிறந்த **வல்லுநர்.**
192. எழிலி, தன்னை **அழகுபடுத்திக்** கொள்வதில் பெரு விருப்பு கொண்டிருந்தார்.
193. ச0 (40)
194. ங (3)
195. கஅ (18)
196. சரு0 (450)